

பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்
அஹமதி தமிழ் திருச்சபை
......நான்
உன்னைவிட்டு
விலகுவதுமில்லை,
உன்னைக்
கைவிடுவதுமில்லை...
யோசுவா 1:5
செய்தி மலர்
2020
மே
இதழ் : 01
மலர் : 17



# சபை ஊழியரின் அன்பு மடல்



## நெருக்கத்திலே பாதுகாக்கிறவர்

கிறிஸ்துவிற்குள் அன்பான திருச்சபை குடும்பத்தாரே எல்லாம் வல்ல இறைவன் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் எல்லோரும் நலமாக இருப்பீர்கள் என்று விசுவாசிக்கிறேன். என்னுடைய ஆவலும் அனுதின ஜெபமும் அதுவே.

கடந்த ஏப்ரல் மாதம் முழுவதும் கண்மணி போல பாதுகாத்த தேவன் வரும் மே மாதத்திலும் புதிய ஆசீர்வாதங்களையும், புதிய நன்மைகளையும் புதிய கிருபைகளையும் தந்து நம் சபையை வழி நடத்துவாராக.

பக்தனாகிய தாவீது சொன்னான் " எனக்கு உண்டான **நெருக்கத்திலே** கர்த்தரை நோக்கி கூப்பிட்டு என் தேவனை நோக்கி அபயமிட்டேன். தமது ஆலயத்திலிருந்து என் சத்தத்தை கேட்டார். என் கூப்பிடுதல் அவர் சந்நிதியில் போய் அவர் செவிகளில் ஏறிற்று" என்று (சங்கீ–18:6)

ஆம் பிரியமானவர்களே, நமக்கு ஏற்படுகிற **நெருக்கங்கள்** அது எப்பேர்பட்ட சூழ்நிலையாய் இருந்தாலும் ஆண்டவரை நோக்கி அப்பா பிதாவே உதவி செய்யும் என்று கூப்பிடுகின்ற பொழுது உடனடியாக அவர் உதவி செய்கிறார். சிறுமைபட்டவனுக்கு கர்த்தர் அடைக்கலமானவர் **நெருக்கப்படுகின்ற** காலங்களில் அவரே தஞ்சமானவர். கர்த்தாவே உம்மை தேடுகிறவர்களை நீர் கை விடுகிறதில்லை. ஆதலால் உமது நாமத்தை அறிந்தவர்கள் உம்மை நம்பியிருப்பார்கள். சிறுமைப் பட்டவர்களுடைய கூப்பிடுதலை மறவார். (சங்கீ–9:9–12)

தேவ மனிதர்கள் தங்கள் நெருக்கத்திலே எப்படி ஆண்டவரை நோக்கி கூப்பிட்டு விடுதலை பெற்றார்கள் என்பதை பற்றி கீழ் வரும் பகுதிகளில் காணலாம்.

### 1. எசேக்கியா ராஜா......

அசீரியா ராஜாவாகிய சனகெரிப் யூதா தேசத்தை பெரும் படையோடு வந்து முற்றுக்கையிட்டான். யூத அரசனாகிய எசேக்கியாவோ அசீரியா ராஜாவுக்கு பயந்து கர்த்தரின் ஆலயத்திலும் ராஜாவினுடைய பொக்கிஷங்களில் அகப்பட்ட எல்லா பொன், வெள்ளி அனைத்தையும் அவனுக்கு கொடுத்து விட்டான். ஆனாலும் அசீரியா தளபதி ரப்சாக்கே என்பவன் யூதா ராஜாவிற்கு விரோதமாய் பல அவதூறான வார்த்தைகளைப் பேசி தூஷித்தான்.

3 ஜாதிகளுடைய தேவர்களில் யாராவது தங்கள் தேசத்தை அசீரியா ராஜாவின் கைக்கு தப்புவித்ததுண்டோ? கர்த்தர் எருசேலமை என் கைக்கு தப்புவிக்கமாட்டார் என்று சொல்லியனுப்பினான். (2-ராஜா-18,19 அதிகாரங்கள்)

இதைக் கேட்ட ராஜாவாகிய எசேக்கியாவோ? தன் வஸ்திரங்களை கிழித்து இரட்டை உடுத்திக்கொண்டு கர்த்தருடைய ஆலயத்தில் பிரவேசித்து இந்த நாள் **நெருக்கமும்** கண்டிதமும் தூஷனமும் அநுபவிக்கிற நாள். பிள்ளை பேறு நோக்கியிருக்கிறது பெறவோ? பெலனில்லை. கர்த்தாவே உமது செவியை சாய்த்துக் கேளும், உமது கண்களை திறந்து பாரும். சனகெரிப் ஜீவனுள்ள தேவனை நிந்தித்து சொல்லின வார்த்தைகளைக் கேளும் என்று அழுதான். அப்பொழுது ஆண்டவர் உன் விண்ணப்பத்தைக் கேட்டேன்.

அசீரியா ராஜாவை அவன் தேசத்திலே பட்டயத்தால் விழப்பண்ணுவேன். யாரை நிந்தித்து தூஷித்தாய்? யாருக்கு விரோதமாய் உன் சத்தத்தை உயர்த்தினாய்? நீ இஸ்ரவேலின் பரிசுத்தருக்கு விரோதமாய் அல்லவோ? உன் கண்களை மேட்டிமையாய் ஏறெடுத்தாய் என்று சொல்லி அசீரியா ராஜா இந்த நகரத்திற்குள் பிரவேசிப்பதில்லை. இதின் மேல் அம்பு எய்வதுமில்லை என்று கூறினார். அன்று இராத்திரியில் சம்பவித்தது என்னவென்றால் கர்த்தருடைய தூதன் புறப்பட்டு அசீரியரின் பாளயத்தில் இலட்தெண்பத்தையாயிரம் (185000) பேரை சங்கரித்தான். அதிகாலமே இதோ அவர்கள் எல்லாரும் செத்த பிரேதங்களாய் கிடந்தார்கள்.

சனகெரிப்பையோ அவன் சொந்த குமாரர்களே பட்டயத்தால் வெட்டிப்போட்டார்கள். என் அன்பு சகோதர சகோதரிகளே, எசேக்கியாவிற்கு ஏற்பட்டது போல பயங்கரமான நெருக்கங்கள் உங்கள் வாழ்க்கையில் தோன்றி உங்களை அச்சுறுத்தலாம். ஆனால் நீங்களோ இஸ்ரவேலின் தேவனை மாத்திரம் கெட்டியாய் பற்றிக்கொள்ளுங்கள். அவரே உங்களுக்கு இரட்சிப்பை அருளுவார். உங்கள் **நெருக்கங்கள்** எல்லாவற்றையும் ஒரு நொடிப்பொழுதிலே மாற்றிப் போடுவார்.

## 2. எஸ்தர் ராஜாத்தி.......

இந்து தேசம் முதல் எத்தியோப்பியா தேசம் வரைக்குமுள்ள 127 நாடுகளை ஆண்ட மகா சக்கரவர்த்தியாகிய அகாஸ்வேருவின் மனைவியாகிய எஸ்தர் ராணிக்கு ஒரு **நெருக்கம்** வந்தது. அகாஸ்வேரு ராஜாவின் அரசவையில் பிரதம மந்திரியாக இருந்த ஆகாகியனாகிய ஆமான் என்பவன் யூத ஜனங்கள் அனைவரையும் அழிக்க திட்டமிட்டான். அவனுடைய இந்த சதித் திட்டம் யூதப் பெண்ணாகிய எஸ்தருக்கு தெரிய வந்தபோது யூதரை எல்லாம் மூன்று நாள் அல்லும் பகலும் உண்ணாமலும் புசியாமலும் இருந்து உபவாசம் பண்ணும்படி கேட்டுக்கொண்டாள். அதன் பிறகு சட்டத்தை மீறி தன் உயிரையும் துச்சமாக எண்ணி ராஜாவினிடத்தில் பிரவேசித்து யூத மக்களுக்காக மன்றாடினாள். கர்த்தர்

ராஜாவின் இருதயத்தை கரையப்பண்ணினார். ஆமானுக்கு மரண தண்டனை விதித்தான்.

ஆகார் மாதம் 13-ம் தேதியிலே யூதரின் பகைஞர் அவர்களை மேற்கொள்ளலாம் என்று நம்பினார்களே அந்நாளிலேத் தானே யூதரானவர்கள் தங்கள் பகைஞரை மேற்கொள்ளும்படிக்கு காரியம் மாறுதலாய் முடிந்தது. யூதர்கள் இளைப்பாறுதலடைந்தார்கள் அவர்கள் சஞ்சலம் சந்தோஷமாகவும், அவர்கள் துக்கம் மகிழ்ச்சியாகவும் மாறினது. பிரியமானவர்களே, யூதர்களுக்கு நேரிட்ட மரணப் போராட்டம் மாறிப் போனதற்கு ஒரே காரணம் அவர்கள் உபவாசத்தோடு கூட தேவனைத் தேடினதுதான்.

"கொடூரனமானவர்களின் சீறல் மதிலை மோதியடிக்கிற பெருவெள்ளத்தைப் போலிருக்கையில் நீர் ஏழைக்கு பெலமும் **நெருக்கப்படுகிற** எளியவனுக்கு திடனும் பெரு வெள்ளத்துக்கு தப்பும் அடைக்கலமும் வெயிலுக்கு ஒதுங்கும் நிழலுமானீர்" (ஏசாயா-25:4) அல்லேலூயா

3. யோனா.......

தேவனுடைய எச்சரிப்பின் செய்தியை நினிவே பட்டணத்திற்கு கொண்டு செல்ல தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட தீர்க்கதரிசி யோனா. ஆனால் அவனோ நினிவே பட்டணத்து மக்களுக்கு பயந்து அங்கு போகாமல் தர்ஷீசுக்குப் போகும் கப்பலில் ஏறி அடித்தளத்தில் போய் படுத்து தூங்கி விட்டான். தேவ சித்தத்தை செய்யத் துணியாமல் பயந்து ஒடுவது யாராலாவது முடியுமா? தேவன் நம் வாழ்க்கையில் செய்ய தீர்மானித்திருக்கிற திட்டங்களுக்கு மாறாக நம் விருப்பப்படி எதையாவது செய்ய முடியுமா?

ஆம் கர்த்தர் பெரிய புயல் காற்றை கட்டளையிட்டார். கடலில் பயங்கர கொந்தளிப்புண்டானது. கப்பல் உடையக்கூடிய நிலைமை ஏற்பட்டது. கப்பலில் உள்ளவர்கள் யார் நிமித்தம் இந்த ஆபத்து நேரிட்டது என்று சீட்டு போட்டு யோனாவைக் கண்டுபிடித்தார்கள். மனம் வெறுத்துப் போன யோனா தன்னை கடலில் தூக்கிப் போட்டுவிடும்படி கேட்டுக்கொண்டான். அவனுடைய உள்ளம் அவ்வளவு வேதனையடைந்திருந்தது. அவன் கேட்டுக்கொண்டபடியே யோனாவை தூக்கி கடலில் போட்டுவிட்டார்கள். காற்றும் கடலும் அமைதியடைந்தது. (யோனா புத்தகம்)

ஆனால் கர்த்தரோ ஒரு பெரிய மீனை ஆயத்தப்படுத்தி யோனாவை விழுங்கும்படி செய்தார். மீனின் வயிற்றியிலிருந்து யோனா ஜெபித்தான். "என் **நெருக்கத்தில்** நான் கர்த்தரை நோக்கிக்கூப்பிட்டேன். அவர் எனக்கு உத்தரவு அருளினார். நான் பாதாளத்தின் வயிற்றிலிருந்து கூக்குரலிட்டேன். நீர் என் சத்தத்தை கேட்டீர். தண்ணீர்கள் பிராண பரியந்தம் என்னை நெருக்கினது, ஆழி என்னை சூழ்ந்தது, கடற்பாசி என் தலையை சுற்றிக்கொண்டது. ஆனாலும் என் தேவனாகிய கர்த்தாவே நீர் என் பிராணனை அழிவிற்கு தப்புவித்தீர் என் ஆத்துமா என்னில் தொய்ந்து போகையில் கர்த்தரை நினைத்தேன்.

அப்பொழுது என் விண்ணப்பம் உமது பரிசுத்த ஆலயத்திலே உம்மிடத்தில் வந்து சேர்ந்தது. நான் துதியின் சத்தத்தோடே உமக்கு பலியிடுவேன். நான் பண்ணின பொருத்தனையை செலுத்துவேன். இரட்சிப்பு கர்த்தருடையது" என்றான். கர்த்தர் மீனுக்கு கட்டளையிட்டார். அது நினிவே பட்டணத்து கரையில் வந்து கக்கி விட்டது. அவனும் பட்டணத்துக்குள் சென்று தேவ செய்தியை சொன்னான். அதைக் கேட்ட பட்டணத்து மக்கள் மனந்திரும்பினார்கள். அல்லேலூயா.

பிரியமானவர்களே, தேவன் உங்கள் வாழ்க்கையிலே செய்ய நினைத்திருக்கிற தீர்மானங்களை செய்ய முடியாதபடிக்கு உங்கள் பாவங்கள் உங்களுக்கு தடையாக இருக்கிறதோ? கீழ்படியாமையின் ஆவி உங்களை அலைக்கழிக்கிறதோ? அதனால் போராட்டங்கள், பாடுகள், வேதனைகள், **நெருக்கங்கள்** உங்களை சூழந்திருக்கிறதோ? மனந்திரும்பி தேவனை நோக்கி விண்ணப்பம் செய்யுங்கள். யோனாவை திசை திருப்பி நல்வழி படுத்தி தன் மகிமையான திட்டத்தை அவன் வாழ்க்கையில் நிறைவேற்றியவர், உங்களை கொண்டு செய்ய நினைத்த காரியங்களை நிச்சயமாய் செய்வார்.

"அவர் ஆலோசனையில் ஆச்சரியமானவர், செயலில் மகத்துவமுள்ளவர்"(ஏசாயா–28:29)

**"இந்த ஜனத்தை எனக்கென்று ஏற்படுத்தினேன் இவர்கள் என் துதியை சொல்லி வருவார்கள்"** (ஏசாயா–43:21)

"நீ பயப்படாதே நான் உன்னுடனே இருக்கிறேன். திகையாதே நான் உன் தேவன் நான் உன்னை பலப்படுத்தி உனக்கு சகாயம் பண்ணுவேன் என் நீதியின் வலது கரத்தினால் உன்னை தாங்குவேன். உன் தேவனாயிருக்கிற கர்த்தராகிய நான் உனது வலது கையை பிடித்து பயப்படாதே? நான் உனக்கு துணை நிற்கிறேன் என்று சொல்லுகிறார்" (ஏசாயா–41:10,13)

"அவரே நமது பெலன் நமது கோட்டை நெருக்கப்படுகிற நாளில் அடைக்கலமானவர்" (எரேமி–16:19)

கர்த்தர் தாமே உங்களோடு கூட இருந்து இந்த மாதம் முழுவதும் பகைவர்கள், நோய்கள், பாவங்கள், சூழ்நிலைகள் போன்றவைகளால் வரும் எல்லா **நெருக்கங்களிலிருந்தும்** உங்களை விடுவித்து, காப்பாற்றி மீட்டெடுத்து ஜெயம் பெறும்படி அருள் புரிவாராக.

கர்த்தருடைய கிருபை உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக.

கிறிஸ்த்துவுக்குள்

அன்பு சகோதாரன்

சபையின் ஊழியர் சகோ. ஸ்டாலின்

## அமலேக்கை மேற்கொள்ளுங்கள்

### தேவனுடைய மனுஷனாகிய மோசே –

கிழே யுத்தம் நடக்கிறது. யோசுவா எப்படியும் யுத்தம் செய்துவிட்டு போகட்டும் என்று மோசே எண்ணியிருந்தால் அந்த யுத்தத்தில் தோல்வியை தழுவ வேண்டியதுதான் வரும். மோசே ஒரு ஜெப வீரனாக மலையின் மேல் உறுதியாக ஏறுகிறதை பார்க்கிறோம். மாம்சத்தோடுள்ள அந்த போராட்டத்தில் நாம் ஜெயம் பெறவேண்டும் என்றால் நாம் கர்த்தருக்கு முன்பாக ஜெபவீரராய் உத்ரவாதத்தோடு திறப்பிலே நிற்கிறவர்காளாய் காணபடவேண்டும்.

சாதாரணமாக யுத்த களத்திலே ஒரு காலாட்படை முன்னேர வேண்டுமென்றால் அதற்கு முன்பாக விமானப்படை ஆகாயத்திலே பறந்து எதிரிகளின் படையை குண்டு வைத்து தூக்கி அவர்களை புறமுதுகிட்டு ஓடச்செய்யும் அதன் பின்பு காலாட்படை வெற்றியோடு முன்னேறிபோகும்.

மிஷனெரிகள் வட இந்தியாவை நோக்கி, புறஜாதி மக்களை நோக்கி , அந்தகார பகுதிகளை நோக்கி செல்லும்போது ஜெப வீரர்கள் ஊக்கமாக ஜெபித்தால்தான் அனுப்பட்டிருக்கிற மிஷனெரிகள் மூலமாக ஆத்தும அறுவடைக் காண முடியும்.

ஒரு பிரசித்திபெற்ற கர்த்தருடைய ஊழியக்காரர் வில்லியம் கேரி சொன்னர், நான் இந்தியாவில் உள்ள வைர சுரங்கத்திற்குள் இறங்குகிறேன், ஆத்துமாக்களாக்கிய விலை மதிக்க முடியாத வைரங்கள் அங்கே கிடக்கின்றன. நான் சுரங்கத்தில் இறங்குகிற அந்த வேளையில் மேலே இருக்கிற அந்த வேளையில் மேலே இருக்கிற நீங்கள் என் இடுப்பிலே கட்டியிருக்கிற கயிற்றை பிடித்து என்னை தாங்குங்கள். எனது சோர்வு நேரங்களில் ஊக்கமாக மன்றாடி எனக்கு உதவுங்கள் என்று சொன்னார். ஒரு முத்து சிப்பியை எடுக்க கடலில் இறங்கினாலும் சரி, சுரங்கத்துக்குள் ஒருவன் இறங்கினாலும் சரி, அவனோடு இணைக்கபட்டிருக்கிற கயிற்றை மேலிருந்து சிலர் உத்தரவாதத்தோடு தாங்க வேண்டும்.அப்பொழுதான் அந்த காரியம் வெற்றியாய் முடியும்.

இன்றைக்கு இந்தியாவில் ஏராளம் சுவிஷேச ஊழியங்கள் நடக்கிறது. கன்வென்ஷன்கள் நடக்கிறது. எங்கு பார்த்தாலும் பிரசங்கங்கள், வீட்டு கூட்டங்கள், படைமுயற்சி கூட்டங்கள், எல்லாம் சரிதான், ஆனால் ஜெபம்தான் போதவில்லை, ஊழியம் செய்யும் ஊழியர்களுக்காக போதுமான ஜெபம் ஏற்கபடாமல்தான் தேசம் இன்னும் சந்திக்கபடவில்லை, கீழே யுத்தம் செய்கிற யோசுவாவுக்காக ஜெபிக்க மோசேயை போல இன்று ஜெபவீரர்கள் ஏழும்புவர்களாக.

## ஆரோனும் – ஊரும்–

மோசேயினால் தன் கைகளை நீண்ட நேரம் உயர்த்தியிருக்க முடியவில்லை, அவனுடைய கைகள் தளர்ந்தது, மெதுவாய் கீழே இறங்க ஆரம்பித்தது. எப்பொழுது அந்த கைகள் கீழே இறங்க ஆரம்பித்ததோ அப்பொழுது அமலேக்கியர் மேற்கொண்டார்கள். எப்பொழுது ஒரு மனுஷனுடைய வாழ்க்கையிலே ஜெப ஜீவியம் குறைகிறதோ, விண்ணப்பங்கள் குறைகிறதோ, கண்ணீரின் ஆவி குறைகிறதோ அப்பொழுது சாத்தான் மேற்கொள்ளுகிறவனாய் இருக்கிறான்.

மோசேயின் கைகள் தளர்வதையும் அமலேக்கு தேவ ஜனங்களை மேற்கொள்வதையும் ஊரும் ஆரோனும், கண்ட போது மோசேயின் கைகளை தாங்கி பிடித்தார்கள், அங்கே மலை உச்சியிலே ஒரு யுத்தம். முழங்காலூன்றி ஜெபிக்கிற மோசேயின் அருகிலே ஆரோனம் ஊரும் நின்று கொண்டிருக்கிறார்கள். ஆவி ஆத்துமா சரீரம், ஆகிய மூன்றும் ஒன்றாயிருக்கிறது போல ஆரோன் ஊர் ஒன்றாய் ஒருமனமாய், ஐக்கியமாய் நின்றார்கள், அது போலவே நாம் ஜெபிக்கும் போதும், ஆவி ஆத்துமா சரீரம், ஒருமனபட வேண்டும், முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு பெலத்தோடும் கிறிஸ்துவில் அன்பு கூர்ந்த ஜெபிக்க வேண்டும்.

பரலோகத்திலுள்ள தேவனும் ஒருமனபட்டிருக்கிறார். வேதம் சொல்லுகிறது "பரலோகத்தில் சாட்சியிடுகிறவர்கள் மூவர், பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவி என்பவர்களே, இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள்." (I யோவான்5:7)

மோசேயும் ஊரும் ஆரோனும் ஒருமனபட்டவர்கள், ஜெபத்திலே ஒன்றாக, தோளோடு தோளும், கையோடு கையுமாக, உள்ளத்தோடு உள்ளமாக இணைந்தார்கள், ஒரு மனபாட்டின், வல்லமை அதுதான் கர்த்தர் சொன்னார். ஒருவன் ஆயிரம் பேரையும் இரண்டு பேர் பதினாயிரம் பேரையும் துரத்துவார்கள், பூமியிலே இருவர் ஒருமனபட்டிருந்தால் பரலோகத்தில் உள்ள தேவன் அதை அருளிச்செய்வார். இரண்டு பேரோ மூன்று பேரோ ஒருமனபட்டு ஜெபிக்க கூடியிருந்தால் கர்த்தர் அங்கே இறங்கி வருவார்.

அன்று புதிய ஏற்பாட்டிலோ அப்போஸ்தலனாகிய பேதுரு நின்று பிரசங்கித்தபோது பதினோரு சீஷர்களும், பின்னால் நின்றார்கள், அவர்கள் ஜெபத்தில் தாங்கினார்கள், வேதம் சொல்லுகிறது, பேதுரு பதினோரு பேருங்கூட நின்று அவர்களை நோக்கி உரத்த சத்தமாய் யூதர்களே எருசலேமில் வாசம்பண்ணுகிற ஜனங்களே நீங்கள் எல்லோரும் அறிந்து கொள்வீர்களா? என் வார்தைகளுக்கு செவிகொடுங்கள்" என்று சொல்லுகிறார்.( அப் 2:14) சிந்தித்து பாருங்கள். பேதுரு பதினோருபேரோடும் கூட நின்று என்று வேதம் சொல்லுகிறது. அதுதான் அந்த வெற்றியின் ரகசியம்.

தேவ பிள்ளைகளே பல வேளைகளில் மாம்சத்தோடு கூட போராடும் போது உன்னால் மேற்கொள்ள முடியாத இருண்ட சூழ்நிலைகள் வரக்கூடும் . சேர்ந்து

போகாதே உடனே உனக்கு ஜெப நண்பர்களை தெரிந்துகொள்.உன்னோடு கூட ஆவியிலே ஊக்கமாக ஜெபத்திலே ஈடுபடக்கூடிய சிநேகிதர்களை தெரிந்து கொண்டு அவர்களோடு இணைந்து ஜெபிப்பாயாக . ஒருவருடைய பாரத்தை ஒருவர் சுமக்கும்போது நிச்சயமாவே நீங்கள் வெற்றி பெறுவீர்கள்.

## தேவனுடைய கோல்–

மோசே தன்னுடைய கோலை பிடித்துக்கொண்டு என்று எழுதவில்லை. தேவனுடைய கோலை என் கையில் பிடித்துக் கொண்டு நிற்பேன் என்றான்.( யாத் 17:9)

அது தேவனுடைய கோல்! தேவனுடைய ஆவியானவரை குறிக்கிறது, சத்துரு வெள்ளம் போல வரும் போது ஆவியானவர் எவ்விதமாய் கொடியேற்றுவர் என்பதை அது உறுதிபடுத்துகிறது.

மோசே தன் கைகளில் அந்த கோலை ஒரு வெற்றிக் கொடியைப் போல உயர்த்திபிடித்தார். யெகோவாநிசி என்று பெயரிட்டார். கர்த்தர் என் ஜெயகொடியானவர் என்று அதன் அர்த்தம். சாதாரணமாக ஒரு ராஜா யுத்தத்திற்கு புறப்படும் போது முன்னால் ஒரு வீரன் அந்த தேசத்தின் கொடியை கெம்பீரமாக ஏந்திகொண்டு குதிரையில் முன்னேரி சொல்வான். அவனை தொடர்ந்து வீரர்கள் அந்த கொடியை பார்த்து வீர முழக்கமிடுவார்கள். சத்தமாய் ஆர்பரிப்பார்கள், எங்கள் தேசத்தின் கொடி எந்த விதத்திலும் கீழே இறங்க கூடாது. எங்கள் கொடி உயர வானத்தில் கெம்பீரமாக பறக்கவேண்டாம் என்று சொல்லி அவர்கள் ஆர்ப்பரிக்கும் போது அநேகருடைய உள்ளத்திலும். சரீரத்திலும், ஒரு வெறி உணர்ச்சி பாய்ந்து ஓடும் . நரம்புகள் முறக்கேறும். கோழையும் கூட பலவானாகிவிடுவான்.

கீழே யுத்தம் செய்கிற இஸ்ரவேலர், மலை உச்சியில் உயர்த்தபட்ட மோசேயின் கோலை பார்த்தார்கள், அது அவர்களுக்கு ஜெயக்கொடியாகவே தோன்றியது! கர்த்தர் எங்களுக்காக வெற்றிகொடியேற்றுவர் என்று விசுவாசமும் பெலனும் அடைந்தார்கள்! அல்லேலூயா!

நாம் ஆவியானவரை உயர்த்தும் போது அவரே நமக்காக யுத்தம் செய்வர். மோசே சொன்னார் "கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார்: நீங்கள் சும்மாயிருப்பீர்கள்"(யாத் 14:14)

( போராட்டம் இன்னும் தொடரும்)

**இதோ, நான் புதிய காரியத்தைச் செய்கிறேன்; ( ஏசாயா 43:19)**

## 2020 ஏப்ரல் மாத வேத வினாவுக்கு

1. புத்தியும் ( யோபு 12:12)
2. இரக்கத்துக்கு ( யோபு 9:15)
3. தெரியபடத்தும் ( யோபு 10:2)
4. கெம்பீரத்தினாலும் ( யோபு 8:21)
5. மாறுபாடானவன் ( யோபு 9:20)
6. உமுடைய பராமரிப்பு என் ஆவியை காப்பாற்றினது. ( யோபு 10:12)
7. தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்த்தரும் ஒருவரே(1 தீமத்தேயு 2:5)
8. நாமாத்தியனாகிய சோப்பார் ( யோபு 11:1,3)
9. சாங்கோபாங்கமாக்குவார் ( யோபு 8:6)
10. அவர் ஜாதிகளை பெருகவும் அழியவும் பண்ணுகிறார். அவர் ஜாதிகளை பரவவும் குறகவம் பண்ணுகிறார்.( யோபு 12:23)
13. என் நாவு உமது நீதியையும் நாள் முழுதும் உமது துதியும் சொல்லிகொண்டிருக்கும் ( சங்கீதம் 35:28)
14. உமது நீதி மகத்தான பர்வதங்கள் போலவும், உமது நியாயங்கள் மகா ஆழமாகவும் இருக்கிறது; கர்த்தாவே, மனுஷரையும் மிருகங்களையும் காப்பாற்றுகிறீர். ( சங்கீதம் 36:6)
11. ஜீவஊற்று ( சங்கீதம் 36:9)
12. என் எலும்புகளெல்லாம் (சங்கீதம் 35:10)

## 2020 ஏப்ரல் மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

Sis. சுகந்தி தம்பு குமார்
Sis. லதா கிருஸ்டோபர்
Sis. ஜீனா சதீஷ்குமார்
Sis. அனுஷா டினோ
Sis. எழிலரசி டேனியல்ராஜ்

சென்ற மாதம் விடுபட்ட பெயர்

Sis. மெர்லின் நித்யா

**அவர் உன்னை வேடனுடைய கண்ணிக்கும், பாழாக்கும் கொள்ளைநோய்க்கும் தப்புவிப்பார்.**
( சங்கீதம் 91:3)

“நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; ... ” (ஆதி – 12:2)

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

செல்வன். பெனின் லாசோ
Sis.. மரிய குளோரி தாஸ்
Sis.. தேவகிருபை ஜெகன்
Sis.. கேத்ரின் சுகன்யா வினிஷ்
Sis.. சஜின் ஜீவா / பிரான்கிளின்
செல்வி. ஹெலன் கிறிஸ்டோபர்
சகோ. ஜெபசிங்
சகோ. ஜெரேமியா
சகோ. ஸ்டீபன். T
செல்வி. அன்னாள் ஆசீர்வாதம்
சகோ. ஜோன்ஸ் ராஜ்
செல்வி. ஏஞ்சலின் ஜெகநாதன்
Sis. எலிசபெத் ஸ்டாலின்
செல்வன். பிரவீன்குமார் சாமுவேல்
செல்வி. ஆனாஸ்டினா கமலதாசன்
Sis. எஹெலன் சாஜிதா ராபின்
செல்வி. சித்ரா ராஜன்
Sis.. ஜெயா கொம்மையன்
செல்வன். பால் சாமுவேல் தாமஸ்
சகோ. பிபின் தேவதாஸ்
சகோ. எபெநேசர்
செல்வி. பியூலா ஜெயக்குமார்
செல்வன். ஜோஸ்வா சுஜின் ஹேகில்
செல்வன். பெனாயா டேனியில் குமார்
செல்வன். டோனி ராமூர்த்தி
சகோ. ஜோன்ஸ் ராஜன்
சகோ. கலியமூர்த்தி
சகோ. ராஜேந்திரன்

செல்வன். மில்டன் பக்தராஜ்
செல்வி. ரீமாறோஸ் எபெநேசர்
சகோ. கிதியோன் பாலமுருகன்
Sis.மஞ்சுளா கிதியோன்
சகோ. சாமுவேல் தாசையா
Sis.. தங்க மெல்பா தாசையா
சகோ. தர்மர்
செல்வி. எவாஞ்சலின் சாமுவேல்
சகோ. ஜேகப் சுந்தர்சிங்
சகோ. கொம்மையன்
Sis.. நான்ஸி கிறிஸ்டினா டேனியில் குமார்
சகோ. ராஜவேல்
சகோ. ஜோஸ் யூசா
செல்வி. மீனா குமாரி சுகுமார்
Sis.. குமுதினி வில்சன்
செல்வன். ஏபிள் ராஜ் எபிநேசர்
செல்வி. தெபோரா ஆமோஸ்
Sis.. கிரேஸ் டெய்சி சுதாகர்
சகோ. அந்தோணிசாமி
சகோ. விஜயன். T
சகோ. ஞானசேகர்
செல்வி. ஜோயல் சுஜின் ஹேகில்
Sis. சவரியம்மா அந்தோனிசாமி
சகோ. ஆசீர்வாதம்
Sis.. சுகந்தி தம்புகுமார்
Sis.லலிதா பாபு
Sis.லதா C.E சுஜின் ஹேகில்
செல்வன். கதிரவன் சுகுமார்

உன்னை இந்த ஜனத்துக்கு எதிரே அரணான வெண்கல அலங்கமாக்குவேன்; (எரே.15:20)

திருமதி & திரு. பெபிட் செல்பின்
திருமதி & திரு. எபெநேசர்
திருமதி & திரு. சுஜின் ஹேகில்
திருமதி & திரு. ஞான ஜெபசிங்
திருமதி & திரு. ஸ்டாலின்
திருமதி & திரு. வில்சன். M
திருமதி & திரு. எட்வின் சாம்
திருமதி & திரு. கிரன் குமார்
திருமதி & திரு. அந்தோனிசாமி
திருமதி & திரு. சுபின் சிங்
திருமதி & திரு.தாமஸ்

திருமதி & திரு.ஆன்டோன் மைகேல் யோவன்
திருமதி & திரு. ஜோன்ஸ் ராஜ்
திருமதி & திரு. கொமையன்
திருமதி & திரு. ஜான் மில்னர்
திருமதி & திரு. ஆல்வின் ஜுலியஸ்
திருமதி & திரு.ஜான்போஸ்கோ
திருமதி & திரு. எட்வர்ட் சந்தோஷ்
திருமதி & திரு. ஜெயசேகர்
திருமதி & திரு. கிறிஸ்டோபர் .M
திருமதி & திரு. வினிஷ்
திருமதி & திரு. டேவிட் பாஸ்கர்

# 2020 மே மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை நேரம் மாலை 5:00 முதல் 6:15 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 03/05/2020 | சகோ. ஆரோக்கிய ராஜ் | சகோ. ஆரோக்கிய தாஸ் |
| 10/05/2020 | சகோ. ஜினு | சகோ. அசோக்குமார் |
| 17/05/2020 | சகோ. சுகுமார் | சகோ.பிரசாத் |
| 24/05/2020 | சகோ. பிராங்ளின் | சகோ. தாமஸ் |
| 31/05/2020 | சகோ. கிருஸ்டோபர் M. | சகோ. அந்தோணி |

## வெள்ளி ஆராதனை நேரம் மாலை 4:00 முதல் 5:45 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 01/05/2020 | சகோ.ஐசக் துரை | சகோ.ஜெயசேகர் |
| 08/05/2020 | சகோ. வில்ஸன் | சகோ. கிருஸ்டோபர் |
| 15/05/2020 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 22/05/2020 | சகோ. டேவிட் ஜெயகுமார் | சகோ. சாமுவேல் தாசையா |
| 29/05/2020 | சகோ. ஜெயபிரகாஷ் | சகோ. ஸ்டாலின் |

**14/05/2020** அன்று முழு இரவு ஜெபம் (இடம் பரிசுத்த பவுல் ஆலயம் )– நேரம் இரவு 10 மணி முதல் அதிகாலை 2:00 மணிவரை

**23/05/2020** அன்று மாதாந்திர பெண்கள் ஐக்கிய கூடுகை
இடம் : பாஹீலில் உள்ள ஜெபவீடு – நேரம் மாலை 6:30 முதல் இரவு 8:30
(வேத வினா பகுதி எஸ்தர் புத்தகத்தில் இருந்து)
(பொறுப்பெடுத்து நடத்துபவர் சகோ ஹெப்சிபா ஸ்டீபன் அவ்கள் குடும்பம்)

**29/05/2020** அன்று மாதாந்திர வாலிபர் ஐக்கிய கூடுகை
இடம் : பாஹீலில் உள்ள ஜெபவீடு – நேரம் மாலை 6:30 முதல் இரவு 8:30
(சகோ. பிரிசில்லா ஆமோஸ் அவர்கள் குடும்பத்தின் சார்பில்)
(வேத வினா பகுதி ஏசாயா புத்தகத்தில் இருந்து)

# 2020 மே மாதத்திற்கான வேத வினா!

**கீழ் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்**

1.நீர் என் இருதயத்திற்கு ஞானத்தை மறைத்தீர், ஆகையால் அவர்களை ————

2.அவர் என்னை கொன்று போட்டாலும், அவர் மேல் ———— ஆனாலும் என் வழி-களை அவருக்கு முன்பாக ரூபகாரம் பண்ணுவேன்.

3. என்னை கூப்பிடும் அப்பொழுது நான் உனக்கு உத்தரவு சொல்லுவேன் உமது கை-யின் கிரியைகளின் மேல் ————

4. நீதிமான் தன் வழியை உறுதியாய் பிடிப்பான், சுத்தமான கைகளுள்ளவன்———— பலத்து போவான்.

5. நான் சுகமாய் வாழ்ந்திருந்தேன், அவர் என்னை நெருக்கி என் பிடரியை பிடித்து என்னை நொறுக்கி என்னை தமக்கு ————நிறுத்தினார்.

6. தேவனுக்கு விரோதமாக என்ன எழும்பினது என்று எலிபாஸ் கூறுகின்றார் ?

7. ஒருவன் தன் சிநேகிதனுக்கு என்ன செய்தால் அவன் பிள்ளைகள் கண்களும் பூத்துபோகும் ?

8.ஸ்திரியினிடத்தில் பிறந்த மனுஷன் எதினால் நிறைந்தவனாயிருக்கிறான் ?

9. நான் இருக்கும் நிலைமையில் நீங்கள் இருந்தால் என்ன செய்திருப்பேன் என்று யோபு கூறினார்?

10. யாரோடு பேசுவது நல்லது என்று யோபு கூறுகிறார். ?

11. கர்த்தாவே, என்னைக் ————; என் தேவனே, எனக்குத் ————

12. உன் நீதியை ————, உன் நியாயத்தைப் ———— விளங்கப்பண்ணுவார்.

13.உத்தமர்களின் நாட்களைக் கர்த்தர் அறிந்திருக்கிறார்; அவர்கள் ———— என்றென்றைக்கும் இருக்கும்

14. என் அக்கிரமங்கள் என் தலைக்கு மேலாகப் பெருகிற்று, அவைகள் ———— என்னால் தாங்கக்கூடாத பாரமாயிற்று.

விடைகளை வருகின்ற 20-05-2020க்குள் சபையின் செயலாளரிடமோ அல்லது செய்திமலர் பொருப்பாளரிடமோ நேரிலோ அல்லது வாட்ஸ் ஆப்பிலோ (whatsApps #66015503-withName)அனுப்பும்படி(கொடுக்கும்படி)கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். விடைகளை "**யோபு 13,14,15,16,17 சங்கீதம் 37,38** புத்தகத்தில் தேடி கண்டுபிடிக்கவும்

**- - -தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; -மத்தேயு 7:7**

## மிஷனரி செய்திகள்

### எரிக் லிடில் (1902–1945)

சீனா தேசத்தில் 1902–ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஸ்காட்லாந்து மிஷனெரி பெற்றோருக்கு பிறந்தார் லிடில். 1920–ம் ஆண்டு எடின்பரோ பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பில் சேர்ந்து அறிவியலில் பட்டம் பெற்றார். கல்லூரியில் படிக்கும் நேரங்களில் கால்பந்து விளையாட்டு அவரின் விருப்பமான விளையாட்டாக இருந்தது. அவர் அதில் சிறந்த திறமையுடையராக விளங்கியதால் பல்கலைகழக அணியிலும் அதின் பின் ஸ்காட்லாந்தின் தேசீய அணியிலும் இடம் பிடித்தார். அதுமட்டுமல்லாமல் பல போட்டிகளில் கலந்து கொண்டு முதலிடம் பிடித்து இங்கிலாந்தில் பிரபலமானார். 100 மீட்டர் தூரம் ஓடுதலில் அவர் நிகழ்த்திய சாதனையை இங்கிலாந்தில் 35 வருடங்களுக்கு யாராலும் முறியடிக்க முடியவில்லை.

1923–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஸ்காட்லாந்து தேசத்தில் ஆர்மடேல் என்ற சிறிய பட்டணத்தில் முதல் தடவையாக இயேசு கிறிஸ்துவின் மேல் தனக்குள்ள விசுவாசத்தை மற்றவர்கள் அறியும்படியாக பேசினார். மிகச்சிறந்த ஓட்ட வீரர் லிடில் பேசுவதை கேட்க பலர் கூடி வந்திருந்தனர். தேவனுடைய அன்பும், அவரைப்பற்றிய அறிவும் தன் உள்ளான மனிதனில் எவ்விதமான வல்லமையைக் கொடுத்தது என்பதை எடுத்துரைத்தார்.

தேவனை நான் ஒருபோதும் கேள்வி கேட்டதில்லை. நான் அவரை அப்படியே நம்பினேன். எது அருளப்பட்டதோ அதை அப்படியே ஏற்றுக்கொண்டேன் என்று தன் உரையில் குறிப்பிட்டார். ஓட்டப்பந்தயங்களில் கலந்துகொள்ள ஆர்வம்கொண்ட லிடில் ஒலிம்பிக் போட்டிகளுக்காக வெகு ஆவலுடன் காத்துக்கொண்டிருந்தார். உலகத்தின் புகழை சம்பாதிப்பதை விட தேவனுக்கு கீழ்படிவதே சிறந்தது என்று எண்ணிய லிடில் ஞாயிற்றுக்கிழமை நடந்த 100 மீட்டர் ஒலிம்பிக் தேர்வு ஓட்டத்தில் கலந்துகொள்ளாமல் மாறாக ஒரு ஆலயத்தில் அதே நாளில் பிரசங்கம் செய்தார்.

எரிக் லிடில் ஓய்வு நாளை ஆசரிப்பதில் மிகுந்த ஜாக்கிரதையாக இருந்தார். ஏசாயா–58:13,14–ல் சொன்னது போல தனக்கு இஷ்டமானதைச் செய்யாமல், தன் காலை விலக்கி பரிசுத்த நாளை பரிசுத்தமாக ஆசரித்து வந்தார். வாக்குத் தத்தங்களை நிறைவேற்றுகிற தேவன் அவரை உயர்ந்த இடங்களில் ஏறும்படியாய் ஆசீர்வதித்தார். ஒரு பிரபலமான திரைப்படத்தின் மூலம் உலகிற்கு கிறிஸ்துவின் மேல் தனக்குள்ள விசுவாசத்தையும், உறுதியையும்

வெளிப்படுத்தினார். அவர் நடித்த ஊயசஇைவள குசைந என்ற அந்த திரைப்படம் உலகில் சிறந்த விருதாகிய ஆஸ்கார் விருதைப் பெற்றது.

வட சீனாவில் 1925 முதல் 1943 வரை மிஷனெரியாக பணியாற்றினார். டியன்ஸ்டின் என்ற இடத்தில் தன் ஊழியத்தை ஆரம்பித்தார். அதன்பின் சியாசோங் என்ற இடத்தில் ஊழியத்தைத் தொடர்ந்தார். 1941–ம் ஆண்டில் சீனா தேசத்தில் காணப்பட்ட நெருக்கடியின் காரணமாக எரிக் லிடியும் அவரது மனைவியும் கனடா தேசத்திற்கு சென்றனர். 1943–ல் வெய்சின் கேம்ப் என்ற இடத்தில் சிறை வைக்கப்பட்டு 1945–ம் ஆண்டு மறுமைக்குள் பிரவேசித்தார்.

அவர் கூறிய இறுதி வார்த்தைகள், அர்ப்பணித்தேன் என்னை முற்றிலுமாய் என்பதே. எரிக் லிடியின் மரணத்தைக் கேள்விப்பட்டு ஸ்காட்லாந்து தேசமே அழுதது. ஆனால் பரலோகம் களிகூர்ந்தது. எரிக் லிடில் சீனா தேசத்தில் உலகப்பிரகாரமான எந்த ஆதாயமும் இல்லாத வாழ்க்கையை வாழ்ந்தார். புகழும் செல்வமும் அவருக்கு எட்டிய தூரத்தில் இருந்த போதும் அவைகளை தேவனுக்கென்று விட்டுக்கொடுத்தார். அவருடைய குணமும் தடுமாறாத மன உறுதியும் உலகெங்கும் உள்ள விசுவாசிகளுக்கு ஒரு சவாலாக விளங்குகிறது.

எரிக் லிடில் தேவனுக்கென்று ஓடினார், பேசினார், விசுவாச உறுதியுடன் வாழ்ந்தார். தேவனுக்கென்று உழைத்து உலகில் மாற்றத்தைக் கொண்டு வருவதற்கு நாம் பிரபலமானவர்களாக இருக்க தேவையில்லை. இருக்கும் இடத்தில் தேவனுக்கு உண்மையும் உத்தமுமாய், முழு மனதுடன் ஊழியம் செய்ய முன் வரவேமா?

"நீங்கள் என்னைத் தெரிந்து கொள்ளவில்லை நான் உங்களை தெரிந்துகொண்டேன். நீங்கள் என் நாமத்தினாலே பிதாவை கேட்டுக்கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத் தக்கதாக நீங்கள் போய் கனிகொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும் நான் உங்களை ஏற்படுத்தினேன்" (யோவா–15:16)

அன்பு சகோதரன்

S.சுகுமாரன்

## "தேவன் காண்கின்ற மனிதன்"

கிறிஸ்து இயேசுவின் இனிதான நாமத்தில் உங்கள் யாவருக்கும் என் அன்பின் வாழ்த்துக்கள்.

அன்பான சகோதர சகோதரிகளே தேவன் காண்கின்ற மனிதன் என்ற தலைப்பில் இந்த மே மாதம் பத்திரிக்கையின் வாயிலக சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. கர்த்தருடைய கிருபை நம் அனைவரோடும் கூட இருந்து பாதுகாத்து வழி நடத்துவாராக.

"மனுஷன் முகத்தை பார்ப்பான் கர்த்தரோ உன் இருதயத்தை பார்க்கிறார்" என்றார் (1–சாமு–16:7)

ஒரு மனிதன் ஒரு கடற்கரை ஓரமாக நடந்து கொண்டிருந்தான் அப்பொழுது ஒரு பையில் களிமண்ணால் செய்யப்பட்ட உருண்டைகள் இருந்தது. அவைகளெல்லாம் ஒரே மாதிரியாக இல்லாமல் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வித்தியாசமாக இருந்தது. யாரோ ஒருவன் களிமன்னால் உருண்டைகள் செய்து அவற்றை வெயிலில் காய வைத்திருக்க வேண்டும் என்று நினைத்தவனாக அந்த பையிலுள்ள உருண்டையாக வெளியே எடுத்து ஒவ்வொரு உருண்டையாக தன் கையினால் எவ்வளவு தூரம் எறிய முடியுமோ அவ்வளவு தூரம் கடலுக்குள் ஒவ்வொன்றாக எறிய ஆரம்பித்தான். அதில் கடைசியாக மீதம் 2 உருண்டைகள் இருக்கும்போது ஒரு உருண்டை எறியும்போது அந்த உருண்டை ஒரு பாறையில் பட்டு உடைந்தது. என்ன அதிசயம்! உடைந்த அந்த உருண்டையில் ஒளி வீசும் விளையேறப்பெற்ற கல் தெரிய ஆரம்பித்தது. அப்பொழுதுதான் மீதம் இருந்த கையில் இருந்த ஒரு உருண்டையை உடைத்து பார்க்கும்போது விளையேறப்பெற்ற கல் இருந்தது தெரிய வந்தது.

அப்பொழுதுதான் அவனுக்கு புரிய ஆரம்பித்தது அவன் எறிந்த எல்லா மண் உருண்டைகளிலும் ஒரு விலையேறப்பெற்ற கல் மறைந்து வைக்கப்பட்டிருந்ததை உணர்ந்து ஐயோ! எல்லா விளைறேப்பெற்ற கற்களையும் கடலில் தூக்கி எறிந்து விட்டேனே? என்று மனம் வருந்தினான்.

இதைப்போலத்தான் பிரியமானவர்களே, நாம் காண்கின்ற மக்களும்! ஒரு உருவத்தை பார்த்து மதிப்பிடுகிறோம். இது ஒன்றுக்கும் பிரயோஜனமில்லாதது என்று ஏன் நம்மையே பார்த்து நாம் குறைவாக மதிப்பிடுகிறோம். ஒரு அழகற்ற மனிதனையோ? மனுஷியையோ நாம் பார்க்கும் போது அவர்களை அழகுள்ள நன்கு உடையணிந்த மற்றவர்களோடு ஒப்பிட்டுபார்த்து இது முக்கியமில்லாதது என்று கணித்து விடுகிறோம். அவர்களுடையே உள்ளான அழகை கவனிக்க தவறி விடுகிறோம்.

தேவன் படைத்த நம் ஒவ்வொருவருக்குள்ளும் அநேக தாலந்துகள் அடங்கியுள்ளது நாம் பார்ப்பது வெளியே மட்டும்தான். ஒருவரையும் அவர்களது வெளித்தோற்றத்தை வைத்து எந்த முடிவுக்கும் வரக்கூடாது.

மனுஷன் முகத்தை பார்ப்பான், கர்த்தரோ இருதயத்தை பார்க்கிறவர். அதனால் தான் தாவீதின் வாட்டசாட்டமான பலசாலிகளான ஏழு சகோதரர்களையும் தேவன் இஸ்ரவேலின் ராஜாவாக தெரிந்துகொள்ளவில்லை. ஆனால் எங்கோ ஒரு இடத்தில் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்த தாவீதை தெரிந்துகொண்டார். ஏனெனில் தாவீது ஆட்டிடையனாக இருந்தாலும் தாவீதின் மனம் தேவனையே நோக்கிக்கொண்டிருந்தது.

"கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன். அவர் எனது வலதுபாரிசத்தில் இருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவதில்லை" (சங்கீ-16:8) என்று தைரியமாக சொல்ல முடிந்தது. அதனால் தான் தேவன் "என் இருதயத்திற்கு ஏற்றவனாக கண்டேன்"என்று தாவீதைக்குறித்து சாட்சி சொல்ல முடிந்தது. அந்த இருதயத்திற்குள் பொதிந்திருந்த தேவனைக் குறித்த தாகத்தை அவர் கண்டார். தாவீதை ஆட்டிடையான்தானே என்று தேவன் தள்ளிவிடவில்லை. தேவன் தாவீதைத் தெரிந்து கொண்டபடியால் தாவீதுக்குள் இருந்த விலையேறப்பெற்ற முத்துக்களாகிய சங்கீதங்களை நாம் இன்றும் வாசித்து களிகூற முடிகிறது.

ஒரு வேளை நம்மோடு வேலை செய்கிறவர்கள், ஆலயத்திற்கு வருகிறவர்கள் மிகவும் எளிமையான தோற்றத்தோடு இருக்கலாம். ஆனால் அதற்காக நாம் அவர்களை புறம்பே தள்ளாமல் யாராக இருந்தாலும் மதிக்கக்கற்றுக்கொள்ள வேண்டும். சிலர் அவர்களின் தோற்றத்தை வைத்து அவன் இவன் என்று மரியாதையில்லாமல் பேசுவார்கள். நாம் அப்படி வெளித்தோற்றத்தை பார்த்து எடை போடாதபடி அவர்களுக்குள் மறைந்திருக்கிற தாலந்துகளை காண தேவன் கிருபை செய்வாராக.

தேவனுக்கு பயப்படாதபடி அழகு மாத்திரம் இருந்து எந்த பயனும் இல்லை. "சௌந்தர்யம் வஞ்சனையுள்ளது, அழகும் வீண், கர்த்தருக்கு பயப்படுகிற ஸ்திரீயே புகழப்படுவாள்" (நீதி-31:30) வெளித்தோற்றத்தை வைத்து நாம் எதையும் நிதானிக்காதபடி, தீர்மானிக்காதபடி,தேவன் காண்கிற வண்ணமாக நாம் மனிதர் யாவரையும் காண தேவன் தாமே நமக்கு கிருபை செய்வாராக.

அற்பமான நம் சரீரங்களை,

மகிமையின் சரீரமாக மாற்றிடுவார்.

கோணலும் மாறுபாடுமான உலகத்தில்

குற்றமற்ற குழந்தைகளாய் வாழ்ந்திடுவோம்.

இராஜா வருகிறார் விரைவில் வருகிறார்

ஆயத்தம் ஆயத்தமாவோம்.

ஆமென்,

கர்த்தர் தாமே உங்கள் யாவரையும் ஆசீர்வதிப்பாராக,

வாலிபம் இயேசுவுக்கே.

## சகோதரிகள் பகுதி

### வார்த்தையின் வல்லமையை

இயேசு கிறித்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள் ! இந்த மாத செய்தி மலர் மூலமாக தங்களை சந்திப்பதில் கர்த்தருக்குள் மிகவும் மகிழ்கிறேன்!.

வார்த்தையின் வல்லமையை குறித்து வேதத்தின் அடிப்படையில் ஒரு சில காரியங்களை குறித்து தியானிக்ககலாம்!

நம்முடைய பிதாவாகிய தேவன் ஆவியானவரால் அருளப்பட்ட வார்த்தைகள் ஒவ்வொன்றும் ஆவியும் ஜீவனுமாயிருக்கின்றது, எபி 4:12.தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும், கருக்குள்ள எந்த பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும், ஊனையும், பிரிக்கதக்கதாக உருவகுத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும், யோசனைகளையும், வகையறுக்கிறதாயும், இருக்கிறது,

ஆம் தேவபிள்ளைகளே யோவான் 1:1 ல் வசனம் கூறுகிறது,ஆதியிலே வார்த்தை இருந்தது,அந்தவார்த்தைதேவனிடத்தில் இருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது, எரேமியாதீர்க்கதரிசி கூறுகிறார். " அவருடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே உட்கொண்டேன் என்றும், (எரேமியா 4:12) தேவன் இந்த உலகத்தை வார்த்தையால் படைத்தார்,அவருடைய வார்த்தையில் வல்லமையுள்ளது, அதை விசுவாசித்து அதற்கு கீழ்படிந்து நாம் வாழவேண்டும்.

வேதத்தில் நூற்றுக்கு அதிபதியின் விசுவாசத்தை பாருங்கள்,ஆண்டவரே! நீர் ஒருவார்த்தைமட்டும் சொல்லும்,அப்பொழுது என் வேலைகாரன் சொஸ்தமாவான் (மத் 8:5–8) நாமும் அது போல வார்த்தையை விசுவாசித்து அதை ஏற்றுக் கொள்ள வேண்டும்,சங்கீதம் 33:9வது வசனம் கூறுகிறது" அவர் சொல்ல ஆகும் அவர் கட்டளையிட நிற்கும்.

நீதிமொழிகள் 2:2 வசனம் கூறுகிறது. நீஎன் வார்த்தைகளை ஏற்றுக்கொள் என்றும், (நீதி 4:20,21) என் மகனே என் வார்த்தைகளை கவனி என் வசனங்களுக்கு உன் செவியை சாய்,அவைகள் உன் கண்களை விட்டு பிரியாதிருப்பதாக என்று கர்த்தர் கூறுகிறார்.

ஆம் தேவபிள்ளைகளே அவருடைய வார்த்தையில் மட்டும்தான் வல்லமையுள்ளது.

சிலநேரங்களில் எமக்கு நேராக வார்த்தை வரும் போது அதற்கு நாம் கீழ்படிய வேண்டும்,நாம் வாழ்ந்து கொண்டிருப்பது கடைசி காலம்,வேதம் கூறுகிறது (மத் 5:18) வானமும் பூமியும் ஒழிந்து போம்,என் வார்த்தைகள் ஒழிந்து போவதில்லை.. தேவன் வேதத்தில் கூறிய ஒவ்வொரு வார்த்தையும் இன்று திட்டமும் தெளிவுமாக நிறைவேறிக் கொண்டிருக்கிறது.

யாக்கோபு( 1:21வது வசனம் " நீங்கள் எல்லாவித அழுக்கையும்,துர்குணத்தையும் ஒழித்துவிட்டு வசனத்தை சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள்,என்று கூறுகிறது.

நாம் வாழ்கிற அன்றாட வாழ்க்கையில் அநேக பாடுகளும், வியாதிகளும், சோர்வுகளும் வரும்போது,கர்த்தர் சொன்ன வார்த்தைகள், ஒவ்வொன்றும், நம்மை தேற்றுகிறது,நடத்துகிறது ஆமென்!. "கர்த்தர் சொல்லுகிறார் " நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால்,நீங்கள் கேட்டுகொள்வதெதுவோ" அது உங்களுக்கு செய்யப்படும்" (யோவான் 15:4)

ஆம்!நாம் தினமும் வேதத்தை நன்கு தியானிக்க வேண்டும் களங்கமில்லா ஞானப்பாலை,நாம் உட்கொள்ளவேண்டும் ,அப்பொழுது நாம் கர்த்தருடையபிள்ளைகளாய் மாறமுடியும் என்பதில் சந்தேகமில்லை(I பேதுரு 2:3)

**யோனாவின் கீழ்படியாமை:–**

(யோனா: 1 :1–3)" யோனாகர்த்தரின் வார்த்தைக்கு கீழ்படியாமல் தர்ஷீசிக்கு ஓடிபோகிறார், அந்த கீழ்படியாமையின் நிமித்தம் அவருக்கு பெரிய ஆபத்து வருகிறது. (யோனா1:4–17) மீனின் வயிற்றில் மூன்று நாட்கள் தேவன் அவரை வைத்திருந்தார்,அவர் எவ்வளவு பெரிய வேதனைபட்டியிருப்பார் என்று நாம் அறிந்திருக்கிறோம் (யோனா 2:3–7)

நாமும் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்படியாத பட்சத்தில்,அநேக ஆபத்துக்கள் வரலாம், ஆம் தேவபிள்ளைகளே நாம் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்படிய அர்பணிப்போமாக!

**நோவாவின் கீழ்படிதல்:–**

( ஆதி 6:14) (ஆதி 6:22) இந்த பூமியை அழிக்கபோகிறேன்,நீபேழையை உண்டுபண்ணு என்று சொன்னதும்,நோவா அதற்கு கீழ்படிந்தார். என்றும் தேவன் கற்பித்தபடியெல்லாம் செய்து முடித்தார் என்றும் கூறப்பட்டிருக்கிறது,அந்த கீழ்படிதலின் மூலம் அவருடைய முழு குடும்பமும் பேரழிவிலிருந்து பாதுகாக்கபட்டார்கள். நாமும் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்படியும்போது நம்மையும் கர்த்தர் பாதுகாப்பார் என்பதில் ஐயமில்லை.

**பவுலின் கீழ்படிதல்:–**

சவுல்,தேவபிள்ளைகளை துன்பபடுத்துகிறவனாக காணப்பட்டாலும்,தமஸ்குவிற்கு செல்லும் வழியில் கர்த்தருடைய வார்த்தை அவருக்கு நேராக புறப்பட்டவுடனே " நான் என்ன செய்ய நீர் சித்தமாயிருக்கிறீர்"என்று அற்பணித்தார்,பெரிய அப்போஸ்தலனாக மாற்றபட்டார்! (அப் (:4,5,6) நமக்குள்ளும் அப்படிபட்ட அற்பணிப்பு மிக அவசியம்,அப்படி நாம் வாழ ஒப்புகொடுக்கலாமே!

**இயேசுகிறிஸ்து பிதாவின் வார்த்தைக்குகீழ்படிதல் :–**

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கீழ்படிதல் நம் அனைவருக்கும் தெரிந்ததே,பிதாவிற்கு,கீழ்படிந்து, இந்த பூமிக்கு வந்து,நமக்காக பிதாவின் சித்தத்தின்படி அவரை ஒப்புகொடுத்தார். நம்முடைய பாவத்திற்காக மரித்து மூன்றாம் நாள் உயிரோடு எழுந்து இன்றும் நமக்காக வாழ்ந்து கொண்டிருக்கிறார்,

நாமும் அதுபோலஅவருடைய வார்த்தைகளுக்கு கீழ்படிந்து (மத்தேயு 24:14ன்படியும்) ராஜ்ஜியத்தின் இந்த சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாக பிரசங்கிக்கபடும் அப்பொழுது முடிவுவரும். என்ற வார்த்தயின்படி சகல ஜாதிகளுக்கும் சுவிஷேசத்தை பிரசங்கித்து . கர்த்தருடைய வருகைக்கு நம்மை நாமே ஆயத்தபடுத்தி பிறரையும் ஆயத்தபடுத்துவோமாக!


கர்த்தர்தாமே இந்தவார்ததைகளைஆசீர்வதிப்பாராக ( வெளி 1:3)

**தேவனுக்கேமகிமையுண்டாவதாக !**

கிறிஸ்துவக்குள்

அன்பு சகோதரி

**ஷீபா பிரசாத்**


மலைகள் விலகினாலும்,
பர்வதங்கள்
நிலைபெயர்ந்தாலும்,
என் கிருபை உன்னைவிட்டு
விலகாமலும்,
என் சமாதானத்தின்
உடன்படிக்கை
நிலைபெயராமலும்
இருக்கும் என்று,
உன்மேல் மனதுருகுகிற
கர்த்தர் சொல்லுகிறார்.
ஏசாயா 54:10

## உங்களுக்கு ஊழியம் செய்ய எங்களுக்காக ஜெபியுங்கள்

### செயற்குழு உறுப்பினர்கள்

சபை ஊழியர் – சகோ. ஸ்டாலின்

66021072

செயலாளர் – சகோ. ஆரோக்கியதாஸ்

99870126

பொருளாளர்– சகோ. எபநேசர்

23922058 - 50203472

பெண்கள் ஐக்கிய தலைவி

சகோதரி . பியூலா ஜெகநாதன்

60797360

வாலிப ஐக்கிய தலைவர் –

சகோ. ஆரோக்கியராஜ்

66159784

Church Website Address - ahmaditamilcongregation.org

Church 'E' mail ID - ahmaditamil.kw@hotmail.com

Church Postel Address

Your name - Po. Box no 46795. 64018, fahaheel ,Kuwait

தங்களது ஜெப விண்ணப்பங்கள்
எதுவாக இருந்தாலும்
எங்களுக்கு தெரிவிக்கவும்
உங்களுக்காக ஜெபிக்க
ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது.

Private Circulation only